உ

ஓம் குஹாய நம :

திருப்புகழமிர்தம்

ஒரு சிறந்த மாத வெளியீடு.

" குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றாள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்."

(மலர் 5.)

விக்கிரம ஹு சித்திரை மீ முதல் பங்குனி மீ வரையில்
(1940 ஹு ஏப்ரல் மீ முதல் 1941 ஹு மார்ச்சு மீ வரையில்.)

திருப்புகழ்த் தொண்டன்

கிருபானந்தவாரி,

"திருப்புகழமிர்தம்" ஆபீஸ்,
108 சாமிநாய்க்கன் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

1941.

இதன் விலை ரூ. 1-8-0.] [தபாற்கூலி வேறு.

திருப்புகழமிர்தம்

பொருளடக்கம்

விஷயங்கள். பக்கங்கள்.

திருப்புகழ்

(பதவுரை, பொழிப்புரை, விரிவுரை, கருத்துரையுடன்)

கந்தரலங்காரம்

ஓம் குஹாயநம :

திருப்புகழமிர்தம்

" குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்."

மலர் 5. Vol 5. | விக்கிரமஹூ சித்திரைமீ 1உ | இதழ் 1 No 1

ஏப்ரல்மீ -1940

திருப்புகழ்

திருவாவினன்குடி (பழநி)

திடமிலிசற் குணமிலிநற் றிறமிலியற்---புதமான
சேயலிலிமேய்த் தவமிலிநற் சேபமிலிசோர்க்--கமுமீதே
இடமிலிகைக் கோடையிலிசோற் கியல்பிலிநற்---றமிழ்பாட
இருபதமுற் றிருவினையற் றியல்கதியைத்---தரவேணும்
கெடுமதியுற் றிடுமசுரக் கிளைமடியப்---போரும்வேலா
கிரணகுறைப் பிறையறுகக் கிதழ்மலர்கோக்---கிறகோடே
படர்சடையிற் புனைநடனப் பரமர்தமக்---கோருபாலா
பலவயலிற் றரளநிறைப் பழநிமலைப்---பெருமாளே.

பதவுரை.

கெடுமதி உற்றிடும் - தீயவை செய்தற்கே தூண்டுகின்ற புத்தியை யுடையவர்களாகிய, அசுர கிளைமடிய - இராக்கதருடைய வம்சமானது அழியுமாறு, பொரும் வேலா - போர்புரிந்த வேற்படையை யுடையவரே! அறுகு - அறுகம்புல்லையும், அக்கு - உருத்திராக்க மணியினையும், இதழ் கிரண - ஒளிபொருந்திய, குறைபிறை - இளம்பிறைச் சந்திரனையும், மலர் - இதழ்களையுடைய மலர்களையும், கொக்கு இறகொடு - பறவையின்

இறகுகளுடன், படர் சடையில் புனை - விரிந்த சடைமுடியில் தரித்துக் கொண்டிருப் பவரும், நடன - பஞ்சகிருத்திய ஆனந்தத் தாண்டவம் புரிபவரும் ஆகிய, பாமர் தமக்கு - சிவபெருமானுக்கு, ஒருபாலா - ஒப்பற்ற புதல்வரே! பலவயலில் - குறைபாடின்றி பலனைத் தரும் வயல்களில், தரளநிறை - முத்துக்கள் நிறைந்துள்ள, பழநிமலை பெருமாளே - பழநிமாமலையின்மீது எழுந்தருளிய பெருமையின் மிக்கவரே! திடம் இலி - அடியேன் நினது திருவருள் நெறியில் உறுதியில்லாதவன், சற்குணம் இலி - உத்தம குணம் சிறிதுமில்லாதவன், நல்திறம் இலி - நல்ல தொண்டுகளைச் செய்வதற்குரிய ஆற்றலற்றவன், அற்புதம் ஆன செயல் இலி - அடியார்களால் வியக்கப் படுகின்ற செயற்கு அருஞ்செயல் ஒன்றேனும் செய்யாதவன், மெய்தவம் இலி - மெய்யறிவோடு கூடிய தவத்தை ஒருபோதும் செய்யாதவன், நல் செபம் இலி - நன்மையை நல்கும் செபமும் செய்யாதவன், சொர்க்கமும் மீது இடம் இலி - சுவர்க்க உலகத்திலும் இடம்பெறத் தகுதியற்றவன், கை கொடையிலி - (சுவர்க்கத்தில் இடம் பெறுதற்கான) கரங்களால் ஒன்றும் கொடுத்தறியாதவன், நல்தமிழ் பாட சொற்கு இயல்பு இலி - தேவரீரை நல்ல தமிழ்ப்பாமாலைகளால் பாடித்துதித்தற்கு சொல் வன்மை யில்லாதவன், (இத்தகைய ஒரு குணமுமில்லாத அடியேன்) இருபதம் உற்று - தேவரீருடைய இரண்டு சரணாரவிந்தங்களை யடைந்து, இருவினை அற்று - நல்வினை தீவினைஎன்கின்ற இரண்டையும் நீங்கி உய்ய, இயல்கதியை தரவேணும் - மீட்டிங்கு வாராத முத்திவீட்டைத் தந்தருளல் வேண்டும்.

பொழிப்புரை.

கொடிய செயல்களையே செய்தற்குத் தூண்டுகின்ற தீப்புத்தியை யுடையவர்களாகிய அசுரர்களது குலம் அழிந்தொழியுமாறு போர்புரிந்த வேலாயுதரே! ஒளிர்கின்ற இளம்பிறைச் சந்திரன், அறுகு, உருத்திராக்கம், இதழ்களோடு கூடிய மலர்கள், பறவையின் இறகுகள் இவற்றை விரிந்த சடையில் தரித்துக் கொண்டிருப்பவரும், உயிர்களுடைய தகராகாசப் பெருவெளியில் இடையறாது ஆனந்த நடனஞ் செய்பவரும், பெரிய பொருளுமாகிய சிவபெருமானுடைய ஒப்பற்ற திருப்புதல்வரே! தவறாமல் நற்பலனைத் தரும் வயல்களில் (செந்நெல் கமுகு முதலியவைகள் ஈனுகின்ற) முத்துக்கள் நிறைந்துள்ள பழநிமலையின் மீது எழுந்தருளியுள்ள பெருமித முடையவரே! அடியேன் தேவரீரை யடைதற்குரிய திருவருள் நெறியில் உறுதி யில்லாதவன்; நற்குண மில்லாதவன்; திருவடித் தொழும்புகளைச் செய்தற்குரிய

நல்ல திறமை யற்றவன்; உலகம் அதிசயப்படும் படியான செயற்கரிய செயல் ஒன்றேனும் செய்யாதவன்; உண்மை யறிவோடு கூடிய தவமும் செய்யாதவன்; முறைப்படி நல்ல செபமும் செய்து பழகாதவன்; சுவர்க்கலோகத்திலும் சிறிதும் இடம் பெற்று இன்புறுதற்கு இடம் பெறுதவன்; ஆங்கு இடம் பெறுவதற்கு இம்மையில் கையால் ஒன்றும் வறியவர்க்கு வழங்கி யறியாதவன்; தேவரீரை நல்ல தமிழ்ச் சொற்களைத் தொடுத்து பாக்களாகப் பாடித் துதிக்க சொல்திறமை யில்லாதவன்; இத்தகைய ஒருவிதமான நற்குணமு மில்லாத அடியேன் தேவரீருடைய திருவடிக ளிரண்டையும் சார்ந்து இருவினைகளும் நீங்கப் பெற்றுய்ய உயர்ந்த முத்தி வீட்டைத் தந்தருளல் வேண்டும்.

விரிவுரை.

திடமிலி:—

சிவபூஜையிலும், சிவாலயவழிபாட்டிலும், சிவமந்திர உச்சாரணத்திலும் உறுதியான நியம மிருத்தல் வேண்டும். ஒவ்வொருவரும் தத்தம் மனதிற்கு உவந்த ஒவ்வொரு தொண்டினை மேற்கொண்டு, அதனை நியமமுடன் உறுதியாகச் செய்துவர வேண்டும். அத்தொண்டிற்கு இடையூறு வருங்கால் உயிரையும் பொருளாக எண்ணாது உறுதியோடிருத்தல் வேண்டும்.

அறுபத்துமூன்றுநாயன்மார்களும்ஒவ்வொருநியமங்கொண்டு அதற்கு இடையூறு நேருங்கால் தமது உயிரையும் பொருள் படுத்தாது அதிதீவிர நிலையிலிருந்தார்கள். தாய நாயனர் நாள் தோறும் சிவபெருமானுக்கு "அமுதூட்டுவது" என்ற நியமங் கொண்டு, தாம்கொண்டுபோன திருவமுது வயல்வெடிப்பில் சிந்தி விட, தம் நியமத்திற்கு இடையூறு வந்துவிட்டதென்றஞ்சி அரிவாளால் தம் ஊட்டியை யரியத்தொடங்க, சிவபெருமானுடைய திருக்கரம் அவ்வயலி லிருந்து வெளிப்பட்டுத் தகைந்து ஆண்டு கொண்டது.

திருக்குறிப்புத் தொண்டநாயனர் அடியார்க்கு துணிவெளுத்துத் தரும் நியமங்கொண்டு, அதற்கு ஓர் இடையூறுற்றபோது

துணியொலிக்கும் பாறைமேல் தலையை மோதப்போகுந் தருணத்தில் சிவபெருமானுடைய திருக்கரம் வெளிப்பட்டுத் தகைந்து அருளியது. இப்படி ஒவ்வொருவரும் தாம்கொண்ட நியமத்தில் மிகுந்த உறுதியுடன் இருந்து முத்திபெற்றனர். அத்தகைய உறுதியே சாலச்சிறந்ததாம்.

சற்குணமிலி:—

சற்குணமாவது இறைவனை யேத்தி வழிபடுகின்ற திருவருட் குணமாம். அது முதலில் ஒருவனுக்கு உண்டாகுதல் வேண்டும்.

"குலம் பொல்லேன் குணம் பொல்லேன் குறியும் பொல்லேன்"
—அப்பர்

நற்றிறமிலி:—

உயிர் ஈடேறுதற்குரிய சாதனங்களைச் செய்யும் திறமையில்லாதவன். அச்சாதனங்களாவன:-சிவாகமமுறைப்படி திருநீறு தரித்தல், உருத்திராக்கம் பூண்டல், சிவபூஜைசெய்தல், திருக்கோயில் வழிபாடுசெய்தல், அடியாரை வணங்குதல், தோத்திரஞ் செய்தல் முதலியனவாம்.

அற்புதமான செயலிலி:—

உறுதியான நியமத்தால், சற்குணமுற்று, நற்றிறமடைவர். அதுகாலை உலகம் இறும்பூதுறும் அற்புதச் செயல்கள் நிகழும். மாதேவனடியார்கட்கு "வாளால் மகவரிந்தூட்டலும், மாது சொன்ன சூளால் இளமை துறத்தலும், தொண்டுசெய்துநாளாறில் கண்ணிடந்தப்பலும்," புனலில் ஏடெதிர் போகெனப் போதலும், கனலில் ஏடிடப் பச்சென்றிருத்தலும், பழைய என்பு பொற்பாவையாதலும், ஆழிமிசைக்கன்மிதப்பில் கரையடைதலும், மங்கைபாகனைத் தூது நடாத்தலும் ஆகிய பற்பல அற்புதங்கள் திருவருட் டுணையால் நிகழும்.

மெய்த் தவமிலி:—

உண்மைப் பொருளை படை தற்கு உண்மையறிவோடு கூடிய

தவம் வேண்டற்பாலது. அத்தவமாவது உயிராவண மிருந்து இறைவனது திருவுருவத்தை உள்ளக்கிழியில் எழுதி அகக்கண்ணாற் கண்டு ஜீவபோதம் நீங்கி மனமடங்கி சித்திரதீபம்போல் அசைவற்று நிற்பதாம்.

அங்ஙனம் நின்று நாள்தோறும் தவமிருப்பார் வேண்டிய வேண்டியாங்கு எய்துவர். அங்ஙனம் தவம்புரிவார் எல்லாவகைச் சித்தியும் பெறுவர். தந்தவத்திற்கு இடையூறு செய்தாரை யழித்தலும், நலம்புரிந்தாரை வாழ்வித்தலும் அவர்க்கு வெகு சுலபமாம்.

"வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப் படும்."
"ஒன்னார்த் தெறலு முவந்தாரை யாக்கலு
மெண்ணிற் றவத்தான் வரும்"

—திருக்குறள்

ஆதலால் தவமே மனிதனையுயர்த்துவது
"ஒருதவமிலன்"

—திருப்புகழ்

நற் ஜெபமிலி:—

ஜெபம்

ஜெபம் என்பது தவத்திற்குமுன் பழகவேண்டிய ஒன்றாம். ஜெபத்தினால் வரும் பயன் தவம். தவமென்பது வரையறையின்றி தியானித்தலாம். ஜெபம் என்பது எண்ணிக்கைக்குட்பட்டதாம். தவத்தின் ஆரம்ப நிலை ஜெபம். முதன்முதலில் குருமூர்த்தியிடம் முறைப்படி பெற்ற மந்திரத்தைத் தனியிடத்தமர்ந்து வடக்கு நோக்கி ஜெபமாலை கரத்திற்கொண்டு முறைப்படி ஜெபம் செய்தல் வேண்டும். அங்ஙனஞ் செய்யும் ஜெப விதியைச் சிறிது விளக்குதும்.

ஜெபமாலையை சத்யோஜாத மந்திரத்தால் அபிடேகம்செய்து, வாமதேவமந்திரத்தால் குச்சுப்புல் சாத்தி, இருதய மந்திரத்தால் கந்த மலர் சாத்தி, அகோர மந்திரத்தால் தூபதீபங்கொடுத்து, தற்புருட மந்திரத்தால் ஒற்றுடை சாத்தி, ஒவ்வொரு மணியை

யும் தனித்தனியே தொட்டு, ஈசான மந்திரத்தினலே நூறு நூறுருவிற்குறையாமல் அபிமந்திரித்து, நாயகமணியைத்தொட்டு பஞ்சப் பிரம மந்திரத்தினலே நூறுருவிற் குறையாமல் அபிமந்திரித்துப்பூசித்து எடுத்து ஜெபம் பண்ணுவதற்கு வைத்துக் கோள்க.

இங்ஙனம் பூசித்து விதிப்படி கொள்ளப்பட்ட ஜெபமாலை கொண்டு ஜெபிக்கினன்றிப் பெரும்பயன் எய்தாதெனச் சிவாகமங்கள் கூறுமெனவறிக.

ஜெபமாலை 108 மணிகளால் அமைக்க வேண்டும்; 54 அல்லது 27 மணிகளானும் அமைக்கலாம்.

"செய்கசெப மாலை நூற் றெட்டிஞற் பாதியுறச்
செய்யலுமாம் பாதத்துஞ் செய்"

——சைவ சமய நெறி

விரலினும் விரலிறை 8 மடங்கு அதிகம் பலன்
அதினும் புத்திர தீபமணிமாலை 10 மடங்கு அதிகம்
அதினும் சங்குமணி மாலை 100 மடங்கு அதிகம்
அதினும் பவளமணி மாலை 1000 மடங்கு அதிகம்
அதினும் படிகமணிமாலை 10,000 மடங்கு அதிகம்
அதினும் முத்து மாலை 100,000 மடங்கு அதிகம்
அதினும் தாமரைமணிமாலை 1,000,000 மடங்கு அதிகம்
அதினும் பொன்மணிமாலை 10,000,000 மடங்கு அதிகம்
அதினும் தருப்பைப்பவித்திர
முடிச்சு மாலை 100,000,000 மடங்கு அதிகம்
அதினும் உருத்திராக்கமணி மாலை அநந்தமடங்கு
அதிகபலன்

உருத்திராக்கமணியைத் தரிசித்தவருக்கு இலக்ஷமடங்குபலன்;
" பரிசித்தவருக்கு கோடி மடங்கு பலன்;
சரீரத்திலே தரித்தவருக்கு ஆயிரங்கோடி மடங்கு பலன்;
கையிற்கொண்டு செபித்தவருக்கு அநந்த மடங்கு பலன்.

உருத்திராக்ஷ ஜெபமாலை கோர்க்கும்போது முகம் முகத்தையும் அடி அடியையும் பொருந்தக் கோவைப்படுத்த வேண்டும். கயிறுயின் 27 இழையினலாகியதாயிருத்தல் வேண்டும். உச்சியில் நாயகமணியைக் கோர்க்க வேண்டும். நாயகம் எனினும் மேரு எனினும் ஒன்றேயாம்.

ஜெபிக்கும்போது நாயகமணிக்கு அடுத்த முகமேனேக்கிய மணியை முதலாகத் தொட்டுச் செபித்துப் பின்பு நாயகமணி கைப்பட்டதாயின், அதனைக் கடவாமல் திரும்ப மறித்து வாங்கி அதனைத் திரும்பக் காத்திலேறிட்டுச் செபிக்கவேண்டும். நாயக மணியைக் கடந்து செபிக்கிற் பாவமுண்டாகும்.

"இலங்கியா தோநா யகமேற்றிச் சொல்க
விலங்கிற்றேற் பாவமுறு மே"

——சைவ சமய நெறி

நாயகமணி யின்றி ஜெபமாலையைச் செய்து கொண்டால் பாவமுமில்லை பலனும் அதிகமில்லை யென்றறிக.

ஜெபிக்கும் போது ஜெபமாலை பிறர் கண்ணுக்குப் புலப்படில் ஜெபங்கள் பயன் படாவாம்; ஆகலால் ஜெபமாலையைப் பிறர் காணு வண்ணம் பரிவட்டத்தால் மூடிக்கொண்டு ஜெபிக்க வேண்டும்.

"பரர் பார்வைப் பட்டாற் பலியா செபங்கள்
பரர்பாரா வண்ணம் பரி"

——சைவ சமய நெறி

ஜெபம் பண்ணும்போது ஜெபமாலையின் மணிகள் ஒன்றோ டொன்று ஓசைப்படிற் பாவமுண்டாம்; ஆகலால் அதனை ஆரா ய்ந்து ஒன்றோடொன்று ஓசைப்படாமல் பைய ஜெபிக்கவேண் டும்.

"ஓசையுறிற் பாவ முறுமதனுன் மாலதனி
லோசையுறமற் செபிக்க ஓர்ந்து"

——சைவ சமய நெறி

இத்தகைய ஜெபம் மூன்று வகையாம். அவை உரை, மந்தம், மானதம் என்பன, (1) உரை யென்பது அருகிலுள்ள பிறர் செவிக்குங் கேட்குமாறு பைய ஜெபித்தலாம். (2) மந்தம் என் பது தன் செவிக்குமட்டும் கேட்குமாறு நாநுனி இதழைத் தீண்ட ஜெபித்தலாம். (3) மானதம் என்பது நாநுனி இதழைத் தீண்டாமல் ஒருமை பொருந்தி மனத்தினுலே ஜெபித்தலாம். மந் தத்தை உபாஞ்சு எனவும் உரையை வாசகம் எனவுங் கூறுவர். மேற்கூறிய உரை மந்தம் மானதம் என்ற மூவித ஜெபங்களையும் செய்யும்போது முறையே தர்ச்சனி மத்திமை அநாமிகை (ஆள் காட்டு நடு மோதிர) விரல்களில் வைத்து ஜெபிக்கவேண்டும்.

மூவிரலினும் வைத்து ஜெபிக்கும்போது பெருவிரலால் தள்ளி ஜெபிக்கவேண்டும். வாசகம் நூறுமடங்கு பலமும், மந்தம் பதினுயிர மடங்கு பலமும் மானதம் கோடிமடங்கு பலமும் தருமென்றறிக.

இவ்வாறு ஜெபிக்கும்போது அம்மந்திரத்திற் குரிய மூர்த்தியினது திருவடியை மனதில் தியானித்துக் கொண்டு ஜெபிக்க வேண்டும்; அப்படி தியானமின்றிச் செய்யும் ஜெபம் குறைந்த பலனைத் தரும்.

"உன்னிச் செபிக்க வுளத்து ளமலனடி
அன்னியமுந் தாழ்ந்தபல மாம்"

——சைவ சமய நெறி

சரீராதிகளை வெறுத்த முத்தி விருப்புடையவன் ஜெபமாலையை மேல்நோக்கித் தள்ளி ஜெபிக்கவேண்டும்; உலகபோகங்களை வேண்டியவன் கிழ்நோக்கித்தள்ளி ஜெபிக்க வேண்டும்.

"வெறுத்தா னுடன்மாலை மேற்புரிக போகம்
பொறுத்தான் கிழ் நோக்கிப் புரி" —சைவசமயநெறி

பிராணவாயுவானது சுழுமுனைநாடியில் ஓடும்போது ஜெபிக்கில் புத்திமுத்தி இரண்டு முண்டாம்; இடை நாடியில் ஓடும்போது ஜெபிக்கில் சுத்தமாயா போகமுண்டாம்; பிங்கலை நாடியில் ஓடும்போது ஜெபிக்கில் எப்போதும் அழியாத முத்தி வீடு உண்டாம்.

"சுழுமுவனயிற் சொல் லாமிரண்டுஞ் சுத்ததநு வாமத்
தழிவில்லா முத்திவலத் தாம்"

---சைவசமயநெறி

வீட்டிலிருந்து ஜெபிக்கின் ஒருரு ஒருருவேயாம்.
பசுக்கோட்டத்திலிருந்து ஜெபிக்கின் ஒன்று நூறாகும்.
திருநந்தனவனத்திலிருந்து ஜெபிக்கின் ஒன்று ஆயிரமாகும்.
மலையின்மேலிருந்து ஜெபிக்கின் ஒன்று பதினுயிரமாகும்.
நதிக்கரையிலிருந்து ஜெபிக்கின் ஒன்று இலக்ஷமாகும்.
சிவாலயத்திலிருந்து ஜெபிக்கின் ஒன்று கோடியாம்.
சிவசந்நிதியிலிருந்து ஜெபிக்கின் ஒன்று அநந்தமாம்.

மாப்பலகை, வஸ்திரம், கம்பளம், மான்றோல், புலித்தோல், தருப்பை என்னும் ஆசனங்களுள் இயன்ற தொன்றில் முழந்தாளிரண்டையும் மடக்கிக் காலோடு காலையடக்கி இடத்தொடையினுள்ளே வலப்புறங்காலை வைத்து இரண்டு கண்களும் நாசி நுனியைப் பொருந்த இருந்து கொண்டு ஜெபிக்கவேண்டும்.

சட்டையிட்டுக் கொண்டும், சிரத்தில் வேட்டி கட்டிக்கொண்டும், போர்த்துக் கொண்டும், குடுமியை விரித்துக்கொண்டும், கௌபீனந் தரியாதும், விரலிலே பவித்திரம் தரியாதும், பேசிக் கொண்டும், இருளி லிருந்து கொண்டும், நாய் கழுதை பன்றி முதலியவற்றையும் புலையர் முதலாயினோரையும் பார்த்துக் கொண்டும், ஜெபஞ் செய்யலாகாது.

ஜெபஞ் செய்யும்போது கோபம், களிப்பு, கொட்டாவி, தும்மல், நித்திரை, சோம்பல், வாதம் முதலியவை ஆகாவாம்.

இன்னும் விரிக்கிற்பெருகும். பிறவற்றைக் குருமுகத்தால் உணர்ந்து அநுஷ்டித்து உய்க.

சொர்க்கமுமீதே இடமிலி:-

முற்பிறப்பிற் புண்ணியஞ் செய்யார் இவ்வுலகத்திலும் குடியிருக்க வீடு இன்றி அலைவர். இப்பிறப்பிலும் மேற்கூறிய சிவநெறிகள் யாதாமொன்றிலேனும் சென்று பண்புபெறாமையால் மறுமையிலும் புண்ணிய வுலகத்தில் இடமின்றி நரகுறுவர்.

உம்-எச்சஉம்மை; - ஏ-பிரிநிலை.

கைக்கொடையிலி:-

மேல்உலகில் இடம்பெறுவதற்கு இம்மையில் வறிஞர்க்கு வழங்குதல் வேண்டும்.

சொற்கியல்பிலி நற்றமிழ் பாட:-

மொழிகளில் சிறந்தது தமிழ் என்பதைக் குறிப்பிடுவான் நற்றமிழ் என்றார். இறைவனை யடைதற்கு எளிய மார்க்கம் பாடுவதேயாம்.

"அளப்பில கீதஞ் சொன்னார்க் கடிகள் தாமருளுமாறே"
—தேவாரம்

"பாடுமவர் தோழத் தம்பிரானே" —திருப்புகழ்

"பாடும்பணியே பணியா வருள்வாய்" —அநுபூதி

ஓம் குஹாய நம:

கந்தரலங்காரம்

(339-வது பக்கத் தொடர்ச்சி)

குப்பாச வாழ்க்கையிற் கூத்தாடு மைவரிற் கோட்படைந்த
இப்பாச நெஞ்சனை யீடேற்று வாயிரு நான்குவெற்பும்
அப்பாதி யாய்விழ மேருங் குலுங்கவிண் ணாருமுய்யச்
சப்பாணி கொட்டிய கையாறிரண்டுடைச் சண்முகனே.

பதவுரை.

இருநான்குவெற்பும் - எட்டு குலமலைகளும், அ பாதியாய் விழ - சரிபாதிகளாய்ப் பிளந்து விழவும், மேரும் குலுங்க - மேருமலையும் நிலைகலைந்து குலுங்கவும், விண்ணாரும் உய்ய - தேவர்கள் சிறைநீங்கிப் பிழைக்கவும், சப்பாணி கொட்டிய - சப்பாணிகொட்டின, ஆறு இரண்டு கை உடை - பன்னிரண்டு திருக்கரங்களை யுடைய, சண்முகனே - ஆறுமுகப் பெருமானே, கு பாச வாழ்க்கையுள் - மண்ணுலகமாய வாழ்க்கையில் நின்று இதுவே நிலைபேறுடைய தென்று, கூத்தாடும் ஐவரின் - களித்துக் கூத்தாடுகின்ற ஐம்புலன்களினால், கோட்பு அடைந்த - சுழற்சியை யுற்ற, இ பாசநெஞ்சனை - இந்த பாசத்தோடுகூடிய மனத்தையுடைய அடியேனை, ஈடேற்றுவாய் - திருவருள் நெறிகாட்டி உய்யும்படிச் செய்வீர்.

இதழ் என்பதை இதழி எனக்கொண்டு கொன்றை எனப் பொருள் கூறுவாரும் உண்டு. பலவயல் என்பதற்கு பலவிதமான வயல் எனவும் பொருள் கொள்ளலாம். அது சிறந்த பொருளன்று.

கருத்துரை.

அசுரகுலகால! சிவகுமார! பழநிமலையாண்டவ! உறுதி, சற்குணம், நல்லதிறம், அற்புதமான செயல், மெய்த்தவம், நல்ல ஜெபம், சுவர்க்கத்தில் இடம், கொடை, தமிழ்பாடும் இயல்பு இவைகளில்லாத எளியேனுக்கு தேவரீருடைய திருவடிப் பேற்றைத் தந்தருள வேண்டும்.

யார்வேண்டினும் கேட்டபொருளீயுந் தியாகாங்க சீலராதலால் முருகவேள் பக்குவமற்றவர்கட்கும் பாகதியைத் தருவர் என்பது குறிப்பு.

விரிவுரை.

குப்பாசவாழ்க்கை:--- கு - உலகம். பாசம் - கட்டுப்படுத்துவது. உலகசுகமே நிலைபோானது என்று கட்டுப்படுத்தும் மாயவாழ்வு.

கூத்தாடுமைவர்:--- உலகவாழ்விலேயே மயங்கி அதனையே மெய்யின்பமென்றுகருதி மிகவும் களித்து, அதனாலுண்டாகிய தருக்கு என்னும் வெறியால் கூத்தாடுகின்ற மெய், வாய், கண், நாக்கு, செவி என்ற ஐம்புலன்கள்.

ஐம்புலன்கள் உயிரில்லாத அஃறிணைப் பொருள்களாயினும் உயிர் அதனுடன்தொடர்புகொண்டு, அவைதம்மினின்றும்வேறென்றுணராது அவைகளைத் தன்னுடன் கூட்டி மயங்கி உயர்திணை போல் கொண்டு அவைகட்கு உட்பட்டிருப்பதால் உயர்திணையாக உருவகம்புரிந்து கூறினர். இதுபோல் அப்பர்சுவாமிகளும் கூறுமாறு காண்க.

பழியுடை யாக்கைதன்னிற் பாழுக்கே நீரிறைத்து
வழியிடை வாழமாட்டேன்!மாயமுந் தெளியகில்லேன்
அழிவுடைத் தாயவாழ்க்கை ஐவரா லலைக்கப் பட்டுக்
கழியிடைத் தோணி போன்றேன் கடவூர் வீரட்டனாரே.

கொட்டு:— கொட்பு-சுழற்சி.

உண்மை யறிவில்லாமையால், உயிர் மயக்க அறிவால் திகைப்புற்றுப் பற்பலவாறு சுழன்று கொண்டிருக்கிறது.

"பிணி எருதெனமயல் எனும் - நரகினிற் சுழல்வேனோ"
---திருப்புகழ்

கொட்பு-என்றதற்கு சுழற்சிஎன்ற பொருளில் "கொட்புறு கலினப்பாய்மா" என்ற கம்பராமாயணக்கவி வருதல் காண்க.

பாசநெஞ்சன்:—

உயிர்களுக்கு செம்பிற் களிம்புபோல் அநாதியேயுள்ளது பாசம். (அறியாமை). அப்பாசம் இறைவனருளால்நீங்கவேண்டும்.

இருநான்கு வெற்பும்......................சண்முகனே!

இளங்குழவியா யுள்ளபோது எட்டுக்குலமலைகள் இடிந்து விழவும், மேருமலைநடுங்கவும், தேவர்கள் துன்பம் நீங்கியுய்யவும் சப்பாணிகொட்டிய பன்னிருகரமுடைப் பெருந்தகையாகிய தேவரீருக்கு அடியேனுடைய பாசத்தை நீக்குவது ஒருபொருளன்று என்பது உள்ளீடாயுள்ள குறிப்பு.

சப்பாணி-கைசேர்த்துக் கொட்டுதல்.

அண்டர்தந் துயரொழித் தனமென்று கொண்டாடி
ஆவலங் கொட்ட மன்னும்
அயிராணி கலவியமு துண்டன மெனத்தேவர்
அரசிரு கரங்கள் கொட்ட
துண்டவெண் பிறைபுரை யெயிற்றுவெஞ் சூருளந்
துண்ணெனப் பறைகொட்ட நீள்
சுருதியந் தனரிடந் தொறுமங்கலப் பெருந்
தூரியங் கொட்ட முட்டப்
பண்டரு பெருங்கவிப் புலமைக்கு நீசொன்ன
படிதிண்டி மங்கொட்ட வெம
பகைநிசா சரர்வளம் பதிமுழுது நெய்தலம்
பறைகொட்ட வெள்வளை தருந்
தண்டரள மலைமொண்டு கொட்டுநக ராதிபா
சப்பாணி கொட்டியருளே
சமரமுக ரண்விர பரசமய திமிராரி
சப்பாணி கொட்டி யருளே.

என்றார் பகழிக் கூத்தர்.

கருத்துரை.

குலகிரிகள் பிளந்து விழவும், மேருமலை குலுங்கவும், தேவர்கள் உய்யவும் சப்பாணிகொட்டிய குமாரக் கடவுளே! ஐம்புலனால் மயங்கும் அடியேனைக் காத்தருள்வீர்.

உ

ஓம் குருப்யோ நம:

சிவாநந்தலஹரீ

(ஆதிசங்கரர் அருளிச்செய்தது)

(340-வது பக்கத் தொடர்ச்சி)

3
(61) அங்கோலம் நிஜபீஜஸந்த திரயஸ்காந்தோபலம் ஸூசிகா
4 4 4 3 4
ஸாத்வீ நைஜவிபும் லதா க்ஷிதிருஹம் ஸிந்து: ஸரித்வல்லபம்!
2 2 3 3 3
ப்ராப்நோதீஹ யதா ததா பசுபதே: பாதாரவிந்தத்வயம்
3 4
சேதோவ்ருத்திருபேத்ய திஷ்டதி ஸதா ஸா பக்திரித்யுச்யதே!!

பதவுரை.

இஹ—இவ்வுலகத்தில்
நிஜபீஜஸந்ததி: — தன்னுடையதான விதைகளின் கூட்டமானது
அங்கோலம் — அங்கோலம் என்ற மரத்தையும்
ஸூசிகா—ஊசியானது
அயஸ்காந்தோபலம் — ஊசிக்காந்தக் கல்லையும்,
ஸாத்வீ—பதிவிரதையானவள்
நைஜவிபும் — தன்னுடைய கணவனையும்
லதா—கொடியானது
க்ஷிதிருஹம்—மரத்தையும்
ஸிந்து:—நதியானது
ஸரித்வலம்பம்—கடலையும்
யதா—எப்படி
ப்ராப்நோதி—அடைகிறதோ
ததா—அப்படி
சேதோவ்ருத்தி: — மனதின் வியாபாரமானது
பசுபதே: — ஆன்மாக்களுக்குத் தலைவனாகிய சிவபெருமானுடைய
பாதாரவிந்தத்வயம் — திருவடித் தாமரைகள் இரண்டையும்
உபேத்ய—அடைந்து
ஸதா—எப்பொழுதும்
திஷ்டதி—இருந்தால்
ஸா—அதுதான்
பக்திரிதி—பக்தியென்று
உச்யதே — சொல்லப்படுகின்றது.

பொழிப்புரை.

இவ்வுலகத்தில் தன்னுடைய விதைகள் அங்கோலமரத்தையும், ஊசி காந்தத்தையும், மனைவி கணவனையும், கொடி மரத்தையும், நதி கடலையும் எப்படி அடைகின்றனவோ அப்படி மனதின் வியாபாரமானது சிவபெருமானுடைய திருவடிக் கமலங்களை அடைந்து எப்பொழுதும் இருந்தால் அதுதான் பக்தியென்று சொல்லப்படுகின்றது.

ஓம் குஹாய நம :

கந்தர் திருவிளையாடல்

(345-வது பக்கத் தொடர்ச்சி)

வீரவாகுதேவர் வச்சிரவாகு மாண்டதையும், அவனுடைய சேனைகள் புறந்தந்து ஓடினமையையும், பின்பு போர்செய்ய வருவோர் இல்லாமையையும், சூரியன் அஸ்தமித்ததையும் கண்டு, "எம்பிரானது ஆணையை யிகழ்ந்த இச்சூரனது நகரையழித்து என் சினத்தைச் சிறிது தணித்தேன்; இனி அறுமுகப் பெருமானை விரைவிற்போய் பணிவேன்" என்று எண்ணி, காற்றையும் கூற்றையும் ஒப்பச் செல்வாராயினர். அவரைக் கண்ட அவுணர்கள் "இவன் நமக்கு ஒரு யமன்; இவனை அணுகன்மின்; அணுகன்மின்; கொல்வான்" என்று ஓலமிட்டு ஓடினார்கள். வீரவாகுதேவர் விண்வழியே வேற்படையண்ணலைத் தியானித்துக் கொண்டு, வடதிசையிலுள்ள இலங்கை மலையை யடைந்தார்.

அப்பொழுது அதனைக்காவல் செய்பவனும், முப்புரத் தவுணர்களை யொத்த வலிமையை யுடையவனும், ஆயிரம் முகங்களையும் யமபுரத்தின் வாயில்கள் போன்ற வாய்களையும் இரண்டாயிரங்கைகளையும் அவைகளிலே பல படைக்கலங்களையும் ஆயிரம் மேருகிரிகள் ஒருங்கு திரண்டாலன்ன உடலையுடையவனும் அதிவீரனது பிதாவுமாகிய யாளிமுகன் என்பவன் அன்று காலையில் சூரபன்மனைப் போய்க்கண்டு திரும்பிவந்து, தன் மகனாகிய அதிவீரன் இறந்தமையைக் கேட்டு வருத்தமுற்று, அவ்விலங்கை மலையில் இருந்தான். அவன் வீரவாகுதேவரைக் கண்டு "இவன் யாவன்" என்று வினவ, அருகிலுள்ளார் வீரவாகுதேவர் இலங்கையிலும் சூரனது நகரிலும் செய்த விஜயத்தைக் கூறினர். யாளிமுகன் கேட்டு மனங்கொதித்து, என்மகனைக் கொன்று "என் காவலைக் கடந்த இவனைக் கொல்வேன்" என்று சீறியெழுந்து படைகளுடன் வீரவாகுதேவரை எதிர்த்தான். வீரவாகுதேவர் தன்னைச்சூழ்ந்து போர்புரியுஞ் சேனைகளை வாட்படையால் கொன்று வீழ்த்தினர். யாளிமுகன் கோபங்கொண்டு ஆயிரங்

கைகளையும் ஒருகையாற்பிடித்து வாளால்வெட்டினர். யாளிமுகன் மற்றை ஆயிரங் கைகளால் ஆயிரம் மலைகளைப் பறித்து வீரவாகு தேவர்மேல் வீசினன். அவைகள் அவருடைய மேனியெங்கும் பட்டுப் புழுதியாயின. வீரவாகுதேவர் அவனுடைய மற்றை ஆயிரங் கைகளையும் வெட்டி வீழ்த்தினர். அவன் ஆர்த்து ஆயிரங் துதிக்கைகளாலும் அவரைப் பிடிக்க நீட்டினன். அவர் அவனுடைய ஆயிரஞ் சிரங்களையும் ஒருங்கே அறுத்துக் கொன்றார்.

பின்னர் வீரவாகுதேவர் வாட்படையை உறையுட் புகுத்தி, கடலைக் கடந்து திருச்செந்திலம்பதியை யடைந்தார். அவருடைய வரவைக்கண்ட பூத சைனியங்கள் முழுமதியைக் கண்ட கடல் போல் ஆரவாரித்தன. பூதப்படைத்தலைவர் யாவரும் எதிர் கொண்டு அஞ்சலிசெய்து தழுவி உவகைமொழி கூறினர்கள். வீரவாகுதேவர் அவர்களைத் தாமுந் தழுவி, "இழிதொழிலுடைய இராக்கதர்களுடைய ஊருக்குச் சென்றதனல் வந்த பாவத்தை உங்களைக் கண்டதனல் நீங்கப் பெற்றேன்" என்று அன்போடு முகமன் கூறி, இலக்கத் தெண்மர்களும் வந்து வணங்க, அவர்களுக்கு ஆசிகூறி, அவர்களும் பூதப்படைத் தலைவரும் உடன் வர, முருகவேள் எழுந்தருளியுள்ள திருக்கோயிலை அடைந்து, அரியயனுதி யமரர் குழாஞ் சேவித்துக்கொண்டு மருங்கில் நெருங்கிச் சூழ வீற்றிருக்கும் எம்பிரானுடைய திருக்கோலத்தைக் கண்டு களித்து, அன்புமேலிட்டு என்பும் மனமும் உருகவும், இன்பக்கண்ணீர் சொரியவும், உடல் கம்பிக்கவும், புளகம் அரும்பவும், அவருடைய திருவடித் தாமரைகளை மும்முறை வணங்கி துதித்து நின்றார்.

குமாரக்கடவுள் "வீரவாகுவே! நீ தூதுசென்று சூரனுக்கு நம் ஆணையைக் கூற, அவனுரைத்த ப,தில் மொழியையும் பிறவற்றையும் கூறுதி" என்றார். வீரவாகுதேவர் "எம்பெருமானே அடியேன் சூரனிடம் அநேக நீதிகளை எடுத்துக் கூறி தமது ஆக்ஞையையும் எடுத்து மொழிந்தேன். அவன் "அமரர்சிறையை விடுகிலேன்" என்று வெகுண்டுகூறி மறுத்து விட்டான். அடியேன் திரும்பி இங்குவந்தேன்" என்று விண்ணப்பஞ் செய்தார். யாண்டும் நீக்கமற நிறைந்தவரும் முற்றுருங் குணர்ந்த முழுமுதலுமாகிய முருகப்பெருமான், "தம்பி! உன்னுடைய வெற்

றியை யொன்றுஞ் சொன்னுயில்லை, அதனையுஞ் சொல்லுதி'' என்னலும், வீரவாகுதேவர் "அண்ணலே! அடியேன் சென்றபோதும் மீண்டபோதும் தடுத்தவர்களைத் தேவரீரது திருவடித் தாமரைகளின் வலிமையால் கொன்றுவிட்டு வந்தேன்'' என்று சுருங்கச் சொன்னார். அறுமுகனார் "அவுணர்களால் மிகவும் வருந்தினை போலும்'' என்று பேரருள் புரிந்தார்.

அப்பொழுது ஆறுமுகக் கடவுள் அச்சுதன் அம்புயன் அமரர்கோன் இவர்களைப் பார்த்து, "தேவர்களைச் சிறை விடுத்து சுகமேயிருக்குதி என்று யாம்கூறிய அறவுரையைச் சூரன் கேட்டானில்லை. ஆதலால் நாளை அவனோடு போர்செய்யப் போவோம்'' என்று சொல்லி யருளினர். "இனி சூரன் அழிந்தான்'' என்று யாவரும் மகிழ்ந்தனர். வீரவாகுதேவர் சிறையிலிருந்த சயந்தனைக் கண்டு தேறுதல் கூறியதை இந்திரனுக்குச் சொல்லி அவன் மனத்தைத் தெளிவித்தார்.

பிறகு வீரமகேந்திரபுரியில் சேனைகளோடு வச்சிரவாகு இறந்ததையும் வீரவாகுதேவர் மீண்டுசென்றதையும் தூதுவர் சூரபன்மனிடம் கூறினார்கள். சூரன் கேட்டு துன்பக் கடலில் வீழ்ந்து கண்ணீர்விட்டுக் கதறினன். அவனுடைய சுற்றத்தாரும் சூழ்ந்து நின்று புலம்பினர்கள். பதுமகோமளையும் மகனை நினைந்து அழுதாள். அப்பொழுது தருமகோபன் என்னுந் துன்மந்திரி வந்து சூரபன்மனை நோக்கி "மன்னர்மன்ன! நீ அழிவற்ற ஆயுளும் கீர்த்தியும் அரசும் உடையை. ஒருதூதுவன் செய்த சிறுசெயலுக்காக இவ்வாறு வருந்தினல் தேவரும் மூவரும் நகைப்பர். வீரர்கள் வருந்தக்கூடாது. இரங்கலே'' என்று தேற்றினன். சூரபன்மன் ஒருவாறுதெளிவுற்று,"அந்தத்தூதுவன் மீண்டுபோனதை நீங்கள் நேரிற் கண்டீரா? அல்லது கேட்டீரா?'' என்ன நேரிற்கண்டோமென்று அருகிலுள்ளோர் கூறினர்கள். சூரன் "விரைவிற்போய் பிரமனை அழைத்துவம்மின்'' என்றுகூற, "இந்த அண்டத்துப் பிரமன் மற்றையதேவரோடுகூடி அறுமுகனிடமிருப்பதாகப் பார்த்தவர்கள் கூறினர்கள்'' என்றார். சூரன் நெருப்பெழச் சிரித்து "நன்று, நன்று. மற்றையண்டத்துப் பிரமனை யழைத்துவாரும்'' என்றான். அவ்வாறே அவர்கள் மற்றையண்டத்துப் பிரமாவை யழைத்துவந்து விடுத்தார்கள். அவரைக் கொண்டு அழிந்த நகரை முன்போலவே அழகுறச்செய்து, அவரைத் தன்னிருக்கைக்கு அனுப்பிவிட்டுகொலுவீற்றிருந்தான்.

(தொடரும்)

ஓம் குஹாயநம:

கற்பு

(348வது - பக்கத் தொடர்ச்சி.)

பூரணமான நிலவு வீசிக்கொண்டிருந்தது. தென்றல் சுகமாக இன்பத்தை விளைவித்துக்கொண்டிருந்தது. எங்கும் இனிய பாடல்களின் ஒலியும் சங்கீதவாத்தியங்களின் ஒலியும் இனிமையை ஈந்துகொண்டிருந்தது. கோயில்களில் பள்ளியறை சேவைநடந்து கொண்டிருந்தது. மணி 10 இருக்கும். மேல்மாடியில் வெட்ட வெளியில் சாய்வுநாற்காலியில் சந்திரவதனன் சாய்ந்து கொண்டிருந்தான். எதிரில் மேஜைமேல் திருவாசகம், தேவாரம், திருப்புகழ் முதலிய அருள்முறை நூல்கள் இருந்தன. சந்திரவதனன் வானத்தை நோக்கி குளிர்ந்த கிரணத்தைப்பொழியும் தண்ணிலாவையும், நீல ஆடையில் முத்துக்களைப் பதிபவைத்தாப்போன்று அழகு செய்யும் எண்ணிறந்த நட்சத்திரங்களையும் பார்த்து, அவைகளின் இயற்கை யழகில் ஈடுபட்டுக் கொண்டிருந்தான். "என்னே இறைவனது சிருஷ்டியின் அமைப்பு? தன்னருள் வெளிக்குளே அகிலாண்ட கோடி யெல்லாம் தங்கும்படிக்கு இச்சைவைத்து உயிர்க்குயிராய் தழைத்த ஆண்டவனது அருளாலே இந்த உடுக்கள் வானில் நிற்கின்றன. அந்தரத்திலே இவைகளை நிற்க வைத்திருப்பது இறைவனது அருட்சத்திஒன்றேயன்றோ? அவ்விறைவனது அளவிலாற்றலை என்னென்றுபுகழ்வது........."
என்று பலவாறு சிந்தனை செய்துகொண்டிருக்குந் தருவாயில் அவனுடைய அன்புக்களஞ்சியமாகிய அறம்வளர்த்தநாயகி தங்கக்கிண்ணத்தில் பால்கொண்டுவந்து கணவனிடம் தந்து நின்றாள்.

சந்திரவதனன் மனைவியை நோக்கி, "மாசில்கற்புடைமாதே! இப்பாலினும் பரிசுத்தமானது நின்மனம். பாலைக்காய்ச்சினாலும் சுவைகுறையாது; அதுபோல் உன்னைத் துன்புறுத்தினாலும் நின் குணம்குறையாது. இந்தச் சந்திரனைவிட நின் முகங்குளிர்ந்திருக்கின்றது. இந்த நட்சத்திரங்களைவிட நின்பல் ஒளிசெய்கின்றது.

பிரியநாயகி! இட்டுண்ணுதவன் செல்வம் எப்படி குறையுமோ அப்படி நின்இடை குறுகிஇருக்கின்றது. இல்லையென்னுது வழங்குபவன் செல்வம்போல் நின்தனம் வளர்ந்திருக்கின்றது. இப்படி அருகில்இரு'' என்ருன். அறம்வளர்த்தநாயகி கணவன் இன்னுரைக்குமகிழ்ந்து கீழமர்ந்து அவன்காலை மெல்லவருடிக் கொண்டு, "பிராணேசா! தாங்கள் ஏதோ ஆழ்ந்தயோசனையில் இருந்தீர்; அதற்கு இடையூருக நான்வந்ததற்கு மன்னிக்கவேண் டும். பெண்கள் கணவனையே கடவுளாக நினைக்கவேண்டும்.

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை''

என்ற பொதுமறையின் புனித மொழிப்படி பதிபக்தியிற் சிறந்திருக்கவேண்டும். கணவனும் அத்தகைய மனைவியைத் தவிர பிறமாதரை மனத்தாலும் தீண்டாமலிருக்க வேண்டும்.

"இந்த இப்பிறவிக் கிருமாதரைச்
சிந்தையாலுந் தொடேன் என்ற செவ்வரந் தந்த''

ஸ்ரீ ராமசந்திரனது உறுதியான ஏகபத்தினி விரதத்தைப் போற்ருதார் யாவர்? அவரைப்போல் ஒவ்வொரு புருடரும் இருந் தால் உலகில் எல்லாப்பெண்களும் கற்புடையவராகவே இருப்பர். பெண்ணுலகம் தூய்மையாகவே இருக்கும். நாடு நலமுறும். பெண் கள் தத்தம் கணவனிடம் இன்புறுவர். ஆண்கள் மட்டும் வரம் பின்றி வாழலாமா? தாங்கள் மட்டும் நானிருக்கும்போதும் நான் இல்லாதபோதும் வேறு ஒருபெண்ணிடம் உறவாடுகின் றீரே அதுஞாயமா? அது நீதியா?'' என்ருள்.

சந்திர:--- பெண்மணியே! நான் இந்தநிமிஷம்வரை நின்னைப் பார்த்த கண்ணுலே வேறு ஒரு பெண்ணையும் பார்த்த தில்லையே! நீ என்மீது வீண்குறை கூறுகின்ருய். பெண்கள் எப்போதும் கணவனை நம்புவதே கிடையாது. நீ என் செய்வாய்? பெண்கள் இயல்பு கணவனைச் சந்தேகிப்பது.

"வழுத்தினுள் தும்மினேளுக அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினி ரென்று.''

என்ற திருக்குறள் சத்தியமே.

அறம்:--- காதல! நான் அப்படி வீணே சந்தேகிக்க மாட்டேன்; தாங்கள் தான் மறைக்கின்றீர். இது ஆண்களின் இயல்பு.

சந்திர:--- நாயகி! எந்தப்பெண்ணுடன் உறவாடினேன்? சற்று சொல்.

அறம்:--- காந்த! நாள்தோறும் அந்தப் பெண்ணுடன் உறவாடுகின்றீர். அவள் வந்துவிட்டால் நான் அருகிலிருக்கும்போது கூட அவள் வசமாகி விடுகின்றீர். இன்னும் சிறிது நேரம் கழித்தால் அவளுடன் உறவாடுவீர். நீங்களே இல்லையென்று பொய்சொன்னால் நான் என்ன சொல்வது?

சந்திர:---மாதரசே! ஒருமாதையும் பாராத என்மீது இவ்வாறு வீண்பழி சுமத்துகின்றனை. வேண்டாம்; சந்தேகத்தை விட்டுவிடு.

அறம்:--- நாத! நான் ஒருபோதும் ஒருவரையும் பழிகூற மாட்டேன். உண்மையைத்தான் சொல்லுகின்றேன்.

சந்திர:--- பெண்ணே! நான் எந்தப்பெண்ணை நேசிக்கின்றேன்.

அறம்:--- நாத! தாங்கள் எந்தப் பெண்ணுடனும் உறவாடினதேயில்லையோ? சற்று நிதானித்துச் சொல்லுங்கள்.

சந்திர:--- கிடையவே கிடையாது. முக்காலும் கிடையாது.

அறம்:---பிராணேச! இன்னும் சிறிது நேரம்போனால் என் செய்வீர்?

சந்திர:--- ஏன்? தூங்குவேன்.

அறம்:--- அந்தத் தூக்கத்திற்கு அதிதேவதை யார்?

சந்திர:- மூதேவி.

அறம்:- அவள் பெண்ணா? ஆணா?

சந்திர:- பெண் தான்.

அறம்:- அவளுடன் நாள்தோறும் உறவாடுகின்றீரா இல்லையா? நான் அருகிலிருக்கும்போதே அவளுடைய வசமாகி விடுகின்றீரே? இப்போது என்னசொல்லுகின்றீர்?

சந்திர:- (சற்றுதிகைத்தான் பதில் சொல்லமுடியவில்லை மனைவியின் மதிநுட்பத்திற்கு மகிழ்ந்தான்) பெண்ணே! நான் தோற்றுவிட்டேன்.

அறம்:- சரிதோற்றவர்கள்வென்றவர்க்குப்பரிசுதரவேண்டாவோ?

சந்திர:- பெண்ணே! நினக்கு என்னபரிசுவேண்டும்? கூறு; எது வேண்டுமோயினும் தருவேன்.

அறம்:-- ஆருயிர்த்துணைவ! தங்களிடம் ஒருபரிசை யாசிக்கின்றேன். அதுமூவுலகினுஞ் சிறந்தது. எனக்கு அது விலைமதிக்க முடியாதபொருள். அதனை நீங்கள் இப்போது எனக்குத் தரவேண்டும். அதனைவேறு ஒருவருக்கும் தரக்கூடாது. அதற்கு நான்தான் உரியவள் (SOL AgenT)

சந்திர:--- காதலி! உனக்கேதருவேன். வேறு ஒருவருக்கும் தரமாட்டேன். அது என்னபொருள்? கேள்.

அறம்:--- காதல! அதுதான் தங்கள் திருவாயின் முத்தம். அதுதான் எனக்குப் பிரியமானது.

சந்திர:--- பெண்ணே! இதுதானு? ஒன்றல்ல நூறுவேண்டுமாயினும் பெற்றுக்கொள் (என்று அதனை அவள் விருப்பப்படித் தந்தான்).

அறம்:--- பிராணகாந்த! நான் இதற்குப் பதில் தங்களுக்கு என்ன கொடுக்கப் போகின்றேன்.

சந்திர:--- மாதரசே! ஒருபாடலைப்பாடு.

அறம்வளர்த்த நாயகி வீணையை எடுத்து எழுதந்திகளையும் சுருதிசேர்த்து சாரதாதேவிபோல் இருந்து ஒரு பொருளடங்கிய பாடலை மோகனவிராகத்தில் கல்லுங்கரைய இனிது பாடினுள்.

இராகம்: மோகனம். தாளம்: ஆதி.

பல்லவி

,, கொழுநனைத் தொழுமன! மே ;; கன! மேயுறும் அநுதினமே

அநுபல்லவி

,, கொழுநனைத் தொழுதெழக்! ,,கொண்டல்பெய்! யெனப்பெய்யும்
,, எழுபரிதடுத்தவள்! இயலுணர்ந்து மயல்! தணந்து கருணைசெய்யும் (கொழு)

சிட்டாஸ் வரம்

,, கக தபகரி ஸரிச,, கரிஸரி! கா;; பக! ரி கரிஸ ஸதப தஸரி கபதஸ் பதஸ்ரி க்ரிஸ் ச,,க! ரிஸ்ா தாப ஸ்த! ,பாக தபாக ,ரி (கொழு)

சரணம்

,, வேடனை எரித்தா ளொருத்தி - வடவைபோன்ற
,, வெங்கனல் தணித்தா ளொருத்தி
,, தேடரும் மூவரும் வாடச்செய்தா ளொருத்தி
,, சூடனை விசிறியே வீடுபெற்ருளொருத்தி (கொழு)

,, கானத்தில் இறந்த பதியை எழுப்பியோர்பெண்
,, கற்பினுல் கெடுத்தாள் விதியை
,, தானந் தருமஞ்செய்து ஈனந்தனையே கொய்து
,, த்யானமுஞ் செய்து க்ருபானந்தமுற உய்து (கொழு)

சந்திர:-- பெண்ணே! சற்றுநில். நீயும் ஆண் சம்பந்த மடைந்தனை.

அறம்:-- (வீணையை வைத்து விட்டு) என்ன அப்படிச் சொல்லுகின்றீர்?

சந்திர:-- ஒரு ஆணை நேசித்தாய்.

அறம்:-- எப்போ? எங்கே? என் இப்படி பொய்சொல்லுகின்றீர்?

சந்திர:-- நீ இப்போது பாடியது என்னராகம்?

அறம்:-- மோகனம்.

சந்திர:-- அது ஆண்ராகமா? பெண்ராகமா?

அறம்:-- அது ஆண்ராகம்.

சந்திர:-- அப்போது மோகனமென்கின்ற ஆணுடன் நேசித்தாயா? இல்லையா?

அறம்:-- (ஒன்றும் சொல்லமுடியாமல் தலைகுனிந்து வீணையை வைத்துவிட்டு) நான் பாடியது தவறுதான்.

சந்திர:-- அப்படி ஒன்றும் தவறு செய்தாயில்லை. பெண்ணே! நீ மோகனராகம் பாடிக்கொள்; நானும் அந்த நித்ராதேவியுடன் கூடிக்கொள்கின்றேன் என்று எழுந்து சயனஅறைக்குள் சென்று படுத்தான்.

கணவனது சொற்சாதுரியத்தை எண்ணி இதயம் மகிழ்ந்த அறம்வளர்த்த நாயகி அவனுடைய திருவடியை வருடி கணவன் தூங்கியபின் அவனுடைய திருவடியை மனதில் தியானித்துங் கொண்டே அவனருகில் தூங்குவாளாயினள்.

ஓம் குஹாயநம:

சூரவாதித்தன் கதை

சிவபுராண சரிதம்:

(தலம்: முக்கீச்சுரம்: உறையூர்)

[பஞ்சவர்ணேசுரர் - காந்திமதியம்மை வரலாறு:]

திரு. இராவ்சாஹிப், வ. சு. செங்கல்வராய பிள்ளை, M. A.

திரிசிராப்பள்ளிக்கு மேற்கு ஒருமைல் தூரத்தில் உறையூர் என்றஸ்தலம் இருக்கின்றது. இதற்கு திருமுக்கீச்சுரம் என்று பெயர். இது தேவாரம் பெற்றஸ்தலம். சோழராஜதானியாயும் விளங்கிய நகரம். இவ்வூரிற் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு சூரிய குலத்து உதித்த வீரஆதித்தன் என்ற சோழராஜன் ஒருவன் இருந்தான். அவன் அரசாண்டு வருங் காலத்தில் ஒருநாள் தேர்மீதுஏறி திருவுலாப் போந்தான். அங்ஙனம் உலா வரும்பொழுது அத்தலத்தின் பெருமையை அரசனுக்கு உணர்த்த வேண்டிச் சிவபிரான் ஆங்கிருந்த ஒருகோழிமேற் கடைக்கண் சாத்தினர். இறைவனது திருக்கண் ணோக்கம்பெற்ற விசேடத்தால் அக்கோழி அளவுபடாத வீரம்பெற்றுக் கொக்கறகோ என்று கூவிச் சிறகடித்து விசும்பிற் பறந்தது. சிறகடித்த வேகத்தில் எழுந்த காற்றினால் மரக்கிளைகள் முறிந்தன. கோழியும் சோழனது பட்டத்து யானையின் மத்தகத்திற் பாய்ந்து அதன் தந்தங்களை முறிபடச் செய்து அதன் முகத்தைத் தனது கால் முள்ளுகளாற் கீறிற்று. யானையின் முறம் போன்ற காதுகளை வாய்முள்ளினாற் பற்றி வதைத்தது. யானை வாய்திறந்து அரற்றக் கோழி அதன் துதிக்கையைத் தனது காலால் எற்றிச் சரபம்போல அதனுடன் பொருதது. யானை அக்கோழியுடன் போர்செய்ய அஞ்சிப் பிளிறி ஓடிற்று. இக் கூத்தைக் கண்ட சோழன் "இதுஎன்ன அற்புதம்" எனத் திகைத்து

என்னமிட்ட பொழுது, "மன்னர்மன்ன! கேள்! இந்நகரத்தின் ஒருசார்உள்ள வில்வ வனத்துள் இருக்கும் ஈசன் இந்நகரின் பெருமையை உனக்குப் புலப்படுத்தவேண்டிச் செய்த திருவிளையடால் ஆகும்இது. இன்றுமுதல் இவவூர் "கோழிமாநகரம்" என்னும் பெயருடன் விளங்கவேண்டும். நீயும் வில்வவனப் பெருமானைப் போற்றி அவர்திருவருள் கிடைக்கப்பெற்று வாழ்வாயாக" என ஆகாயவாக்கு எழுந்தது. இதனைக்கேட்டசென்னி (சோழன்) சென்னிமேற் கரங்கள் கூப்பி வில்வவனம் எங்கே! எங்கே!! என்றுதேடி வில்வ வனத்தைக்கண்டு ஆங்குத் தரைமிசை வீழ்ந்து வணங்கி அளவிலா மகிழ்ச்சி கொண்டான். அவ்வனத்துள் நுழைந்தான். இறைவன் அருட்குறியை (லிங்கத்தை) க் காணான்; ஆயினும், தேவகணங்கள்தொழுதுபோற்றும் ஆர்ப்பும், மறைகளின்வாழ்த்து முழக்குஞ் செவியில் நன்குப் கேட்டன. "அந்தோ! இறைவன் திருவுரு எங்கேயோ மறைந்துளதே; என் செய்வேன்" எனக் கவலைப் பட்டிரங்கித் தனது மாளிகைக்குப்போய் உண்ணாது தரைமிசைத் தனிக்கிடந்தான். அவனையும் அறியாது சிறுதுயில் வந்தது. அப்பொழுது இறைவன் ஒரு மறையவர் கோலத்தோடு அவன் கனவில் தோன்றி "மன்னர்மன்ன! யாம் இந்த வில்வ வனத்தில் பல காலங்களாக உருதோன்றாமல் வாழ்கின்றோம். வானவர்க்கு மட்டும் புலப்படுவோம். சிலகாலங் கழிந்த பிறகு யாவருங் கண்டு ஏத்த இலிங்கம் என்னும் பேரருட் குறியில் தோன்றுவோம். அப்பொழுது ஆலயம் முதலிய ஏற்படும். நீ கவலைப்படவேண்டாம்" எனக்கூறி மறைந்தனர். மன்னவனும் விழித்தெழுந்தான் - மாயோன், பிரமன், இந்திரன் இவர்களது வலிமையை ஒரு சிறு துரும்பு கொண்டு மாற்றிய பரமன் சிறை வாரணத்தால் துதிக்கை வாரணத்தை வெல்வித்தது ஒரு வியப்பாகுமோ! இறைவன் திருவிளையாடற் பெருமையை யாவரே கணிக்கவல்லார்! எனச் சிந்தித்து அற்புத உளத்தனானான். நாள்தோறும் வில்வ வனத்துக்குப்போய் அவ்வனத்தை வணங்கி வருவான். இங்ஙனம் வாழுநாளில் வில்வவனப் பெருமான் திருவருளால் அவன் மனைவி ஆண் மகவை ஈன்றாள். அப்பிள்ளைக்குச் சூரவாதித்தன் (சூர ஆதித்தன்) எனப்பெயரிட்டுச் சகல வித்தைகளை

யும் கற்பித்தான். சூரவாதித்தனும் அழகு, கல்வி, அறிவு, வீரம் முதலிய சகல செல்வங்களும் நிறைந்து விளங்கினன். பின்னர். வீர ஆதித்தன் தன் மகனுக்கு முடிசூட்டிச் சிவபிரான் திருவடி நீழலை யுற்றான். சூரவாதித்தன் தேவர்கள் வாழ்த்தவும், பகைவர்கள் அஞ்சவும், மண்ணுளோர் போற்றவும் அரசு செலுத்தினன். கொடையினால் மழையை வென்றான், பொறையினால் பூமியை வென்றான், அறிவினாற் சுரர்குருவை (பிரகஸ்பதியை) வென்றான், வலியினால் மேருவை வென்றான், போகத்தில் இந்திரனை வென்றான், பொருட்செல்வத்திற் குபேரனை வென்றான், புகழ்விளக்கத்திற் சூரியனை வென்றான், பரசிவ பத்தியிற் பைந்துழாய் மாலை வென்றான். சூரவாதித்தன் தாளிற் றெழாத அரசர் இல்லை, அவன் புகழைப் பாடாத கவிகள் இல்லை. இவ்வாறு சூரவாதித்தன் ஆண்டுவருநாளில் ஒருநாள் வனவேட்டை ஆட விரும்பித் தனது பரிவாரங்கள் உடன்வரத் தான் ஒரு குதிரைமீதேறிக் காட்டகத்தே புகுந்தனன். அரசனும் வேட்டைக் குடன் வந்த வீரர்களும் செய்த ஆரவாரத்தால் காட்டுளிருந்த சிங்கம், புலி, யானை, கரடி, பன்றி முதலிய மிருகங்கள் எல்லாஞ்தத்தம்இருக்கை விட்டுக் கலைந்து அங்கும் இங்கும் ஓடின; வீரர்கள் எய்த அம்பாலும், வேலாலும் அவைதம்முட்பல காலிழந்தன, கையிழந்தன, வாலிழந்தன, வாயிழந்தன, விழியிழந்தன, தலையிழந்தன, தோலிழந்தன, கொம்பிழந்தன. இங்ஙனம் வேட்டையாடும் பொழுது மான் ஒன்று இட்ட வலையின்மீது தாவித் துள்ளிக் குதித்து ஓடிற்று. அம் மானைத் தொடர்ந்து வெகுதூரம் ஓடினன் அரசன். விரைந்து தொடர்ந்த மன்னன் ஒருகணை எவி அந்த மானைக் காவிரி யாற்றின் கரையில் வீழ்த்தினன். ஓடிவந்த இளைப்பு மேலிட்டாலும், அருகே தோன்றின திரிசிராமலையைத் தொழவேண்டும் என்னும் பெரு விருப்பத்தாலும், அரசன் தன் பரிவாரங்கள் இருக்கும் இடத்துக்குப் போகாது, காவிரிக்குத் தென் கரையில் விளங்கும் திரிசிராமலையின் வடமேற்குப் பாக நோக்கிச் சென்றான். சென்று அம்மலையின் வளமெலாங் கண்ணுரக் கண்டு களித்தான். பின்னர்ச் சிராமலை யப்பரையும் நாகதீர்த்தத்தையும தரிசித்தான். அந்த நாகதீர்த்தத்தின் வனப்பைக் கண்டு அரசன் பிரமித்துநின்றான். (தொடரும்)